தமிழக சட்டப் பேரவை

புதன்கிழமை, 1968 மார்ச் 6.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் **மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. சி. பா. ஆதித்தனார்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள் - விடைகள்.

வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 150, 151 பின்னர் எடுத்துக் கொள்ளப்படும்.

மதுரை மாவட்டத்தில் ஜீப் பஸ்கள்.

*** 152 வினா—திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டத்தில் எந்தெந்த இடங்களுக்கு "ஜீப்" பஸ் விடும் திட்டம் அரசின் பரிசீலனையிலுள்ளது ?

(இ) எந்தெந்த வழித் தடங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது ?

(உ) தற்போது எத்தனை தடங்களில் ஜீப் பஸ் ஓடிக் கொண்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) மதுரை மாவட்டத்தில் எந்த இடத்திலும் ஜீப் பஸ் விடுவதற்கான செயற்குறிப்பு எதுவும் அரசாங்கத்தின் ஆலோசனையில் இல்லை.

(இ) திண்டுக்கல்–சிறுமலை வழித்தடத்தில் ஒரு ஜீப் பஸ் விடுவதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

(உ) திண்டுக்கல் சிறுமலை வழித் தடத்தில் ஒரு ஜீப் பஸ் தற்போது இயங்கி வருகிறது.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, மேலும் பல வழித் தடங்களில் ஜீப் பஸ் விட வேண்டுமென்று கோரிக்கை வந்துள்ளதா ? இதைப்பற்றி என்ன முடிவு செய்யப்பட்டுள்ளது ? இந்தத் திட்டத்தை மேலும் பல மாவட்டங்களுக்கு விஸ்தரிக்க ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இப்பொழுது தமிழ்நாட்டில் மூன்று இடங்களில் இந்த ஜீப் பஸ்கள் விடப்படுகின்றன. 1. திண்டுக்கல்லிலிருந்து சிறுமலை வரையிலும், 2. கோயம்பத்தூரில் பண்ணாரி—தாளவாடி வழித் தடத்திலும், 3. வட ஆர்க்காடு மாவட்டத்தில் அணைக்கட்டிலிருந்து மேலரசம்பட்டி வரையிலும் இந்த ஜீப் பஸ்கள் போய்க் கொண்டிருக்கின்றன. இவைகளை அதிகரிப்பதற்கு கோரிக்கைகள் வரவில்லை. அவற்றை நிர்வகிப்பதில் அதிகச் சிரமம் ஏற்படுவதாக அவர்கள் சொல்லுகிறார்கள். இதைத் தவிர அதில் குறைந்த வருமானம்தான் கிடைக்கிறது. அதிகமான கோரிக்கைகள் வந்தால் அதைப்பற்றி அரசு கவனிக்கும்.

திரு. வி. எஸ். எஸ். மணி : தேசியமயம் ஆக்கும் திட்டத்தில் 65–66 மைல் இருக்கக் கூடிய ஒரு சாலையிலே இடையில் வேரியேஷன் 10 மைல் இருக்குமானால் அப்படிப்பட்ட பஸ்களை சர்க்கார் எடுத்துக் கொள்ளுமா ? அல்லது மாற்று வழிகள் ஏதாவது செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இது தொடக்கக் கேள்வியோடு தொடர்பு கொண்ட கேள்வியல்ல.

திரு. எம். பூபதி : தலைவர் அவர்களே, ஜீப் பஸ்கள் விடும் ஏற்பாடுகள் எத்தனை ஆண்டு காலமாக இருக்கின்றன ? மூன்று மாதங்களுக்கு ஒரு முறை வரவு செலவைப் பார்த்து நிலைமையைத் தெளிவாக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : 1961-ம் ஆண்டிலிருந்து இது ஏற்பாடு செய்யப்பட்டது. 13 பேர்கள் அமர்ந்து செல்லத்தக்க வகையில் ஜீப் பஸ்கள் போகக்கூடிய இடங்களில் விடலாம் என்று ஏற்பாடு செய்யப்பட்டது. அதனுடைய வரவு செலவு குறிப்புகளைப் பற்றி அந்தந்த ஜீப்புகளை ஓட்டுகின்ற தனியார்தான் சொல்ல முடியும். குறைந்த வருமானம்தான் கிடைக்கிறது என்று சொல்லுகிறார்கள். பேருந்துகளில் வசூலிக்கின்ற கட்டணம்தான் இதற்கும் வசூலிக்கப்படுகின்றது. இதற்குச் செலவு அதிகம் ஆகிறது என்று சொல்லுகிறார்கள். ஆகையால் இதற்குப் பல சலுகைகள் கொடுக்க வேண்டுமென்று கோரியிருக்கிறார்கள்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, இந்த ஜீப் பஸ்களில் அதிகமாக வருமானம் இல்லாத காரணத்தால் தனியார் அதிகமாக ஓட்டுவதற்கு விரும்பவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆகையால் அரசாங்கமே ஜீப் பஸ்களை விடுகின்ற பணியினை ஏற்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அரசாங்கம் இந்தப் பொறுப்பை ஏற்பதாக இல்லை. ஆனால் அவர்களுக்குச் சில சலுகைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் சில சலுகைகள் கொடுப்பது பற்றி யோசிக்கப்பட்டு வருகிறது. மற்ற பஸ்களில் வசூலிக்கப்படுகின்ற வரியில் மூன்றில் இரண்டு பங்கு வரிதான் இதற்கு வசூலிக்கப்படுகிறது. மேலும் சில சலுகைகள் பெற வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். மேலும் வரியைக் குறைக்கலாமா அல்லது பிரயாணிகளினுடைய கட்டணத்தை உயர்த்துவதற்கு அனுமதிப்பதா என்பது பற்றியும், ஜீப் வண்டிகள் வாங்குவதற்குக் கடன் அளிப்பதா என்பது பற்றியும் ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

திரு. ரா. ராமச்சந்திர துரை : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் பஸ்கள் போக முடியாத கிராமங்கள் நூற்றுக் கணக்காக இருக்கின்றன. ஆகவே தஞ்சை மாவட்டத்தில் ஜீப் பஸ்களை விடுவதற்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மாண்புமிகு உறுப்பினர் அப்படிப்பட்ட பஸ்களுக்கு அனுமதி கோரினால் அனுமதி தரப்படும்.

திரு சி. கோவிந்தராசன் : மதுரையில் டி. வி. எஸ். டவுன் பஸ்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன. வேறு யாராவது அங்கு டவுன் பஸ்களை ஓட்டுவதற்குள் அனுமதி கேட்டால், அனுமதி கொடுப்பதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இந்தக் கேள்வி அந்தக் கேள்வியில் இடம் பெறவில்லை.

1968 மார்ச் 6]

திரு. இல. பலராமன் : வட ஆர்க்காட்டில் ஜீப் பஸ்கள் விட இருக்கிற தென்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் மலைப் பிரதேசமாக இருப்பதால் அங்கே ஜீப் பஸ்கள் விடவேண்டுமென்று அனுமதி கோரி பல மனுக்கள் அனுப்பியும் அங்கீகாரம் அளிக்கவில்லை. அதற்குக் காரணம் என்ன வென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அங்கீகாரம் வழங்க எந்தத் தடையும் இல்லை. அவர்களுக்கு ஜீப் பஸ்கள் கிடைப்பதில் அதிக சிரமம் இருக்கிறது என்ற தகவல்தான் வந்திருக்கிறது.

திரு டி மார்டின் : நெல்லை மாவட்டத்தில் என்னுடைய தொகுதி யாகிய சாத்தான்குளம் தொகுதியில் மணற்பாங்கான இடமாகவும் அகன்ற பாதைகள் இல்லாத இடமாகவும் இருப்பதால் அங்கே ஜீப் பஸ்களை விடுவதற்கு இந்த அரசுக்கு உத்தேசம் உண்டா? அப்படியில்லை யென்றால் அதற்கான முயற்சி யெடுத்து ஆவன செய்வார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இந்த அரசுக்கு அந்த உத்தேசம் இல்லை. யாராவது ஜீப் பஸ்களை விடுவதற்கு முன் வந்தால் இந்த அரசு அதை வரவேற்கும்.

பஸ்களை அதி வேகமாக ஓட்டுதல்

*153 வினா—திரு. கரு. சிவமச்சாமி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் அரசாங்க பஸ்களை ஓட்டிச் செல்லும் பஸ் டிரைவர்கள் அதிக வேகமாக பஸ்களை ஓட்டிச் செல்வதாக பொது மக்களிடமிருந்து 1967 ஆகஸ்டு, செப்டம்பர் மாதங்களில் ஏதாவது புகார் வந்ததா?

(இ) ஆம் என்றால் அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) தவறு செய்த வலவர்கள் (Drivers) மீது தமிழ்நாடு அரசாங்கப் போக்குவரத்துத் துறையினரால் தக்கவாறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கிறது.

DR. H. V. HANDE : The question refers to overspeeding of buses in August and September 1967. Has there been any usual increase in the number of accidents due to overspeed during these two months as compared to the previous months or previous years ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அந்தக் கணக்கு இல்லை. வேகமாக டிரைவர்கள் ஓட்டிக் கொண்டு செல்கிறார்கள் என்ற புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன.

திரு. கே. விநாயகம் : அரசாங்க பஸ்கள் ஓவர்ஸ்பீட் ஆகப் போவது மாத்திரம் அந்தத் துறையிலே இருப்பவர்கள் குற்றம் செய்கிறார்கள் என்று சொல்வதற்கில்லை. அதைவிட இன்னும் பல குறைகள் சொல்லப்படுகின்றன. பஸ் ஸ்டாண்டில பொதுமக்கள் நின்று கொண்டிருந்தாலும் அவர்கள் கைகாட்டினாலும் நிறுத்தாமல் போவது, அவர்களுக்கு வேண்டியவர்களாக இருந்தால் முன்புறம் இறங்குவதற்குப் பதில் பின்புறம் இறங்குவதுபோன்ற பல குற்றங்கள் இருக்கின்றன. ஆகையால், டிரைவர்களைய